1990 ஆகஸ்ட் 23]

பட்டுக்கோட்டை கால்நடை மருத்துவமனை.

* 3020—திரு. கா. அண்ணாதுரை :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டையில் தற்போது இயங்கிவரும் கால்நடை மருத்துவமனையின் நிலையினை உயர்த்தி Clinicion Centre ஆக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

இல்லை.

ஆதிதிராவிட மாணவர்களுக்கு தங்கும் விடுதி.

* 3116—திரு. வி. பி. இராசன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராசபாளையம் நகரில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள். விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள்.

நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி.

1—

வினா 1371—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தம் நகரில் உள்ள நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியை அரசே ஏற்று நடத்த ஏதேனும் திட்டம் உள்ளதா ?